St. Joseph's Journal of Humanities and Science (Volume 3 Issue 1 January 2016) 47-56

St. Joseph's Journal of Humanities and Science
ISSN: 2347 - 5331

http://sjctnc.edu.in/6107-2/




# மணிமேகலையின் சமுதாயத் தொண்டுகள்

- ஜோ. ரீட்டாமேரி *

## முன்னுரை

கற்பு, ஞானம், தொண்டு இம் மூன்றும் மக்களால் மதித்துப் போற்றப்பட்டப் பண்புகள். கண்ணகி போன்று கற்பு நெறிகாத்து, சிந்தாதேவி போன்று ஞான முதிர்வெய்தி, தனக்கென வாழாது பிறருக்காக வாழ்தலை வாழ்க்கையின் குறிக்கோளாகக் கொண்டு சிறந்தவள் மணிமேகலை. தமிழகத்தின் தவ மகளாய்த் தோன்றியவள் தொண்டுள்ளத்தால் தொழுது போற்றும் பெருமைக்குரியவள். இவளின் தவவாழ்வு அறவாழ்வாகச் சிறந்து சமுதாயப் பெருவாழ்வாக மலர்ந்தத் திறம் இக்கட்டுரையில் ஆராயப் பெறுகிறது.

## பெருமக்களின் சிந்தனைக் கூறுகள்

உலகின் கீழ்த்திசையிலும் மேற்றிசையிலும் சீரிய சிந்தனையாளர்கள் தோன்றித் தங்கள் விழுமியக் கருத்துகளை மண்ணுலகம் உய்வதற்கு வழங்கியுள்ளனர். மனித குலத்தின் பழக்க வழக்கங்களையும், பண்புகளையும் பொருளாகக் கொண்டு அறவியற்கலையை உருவாக்கினர். மனிதப் பண்புகளை ஆராய்ந்து மேற்கொள்ளப்பட்ட இக்கலை மக்கள் பின்பற்றுதற்குரிய பண்புகளையும், விலக்கதக்க செயல்களையும் இனம் காட்டி நிற்கின்றது.

மனம்மொழி மெய்களின் அடியாகப் புரியும் நல்வினை தீவினை என்னும் பேராற்றல்கள் உலகில் உள்ளன என்றும், அறிஞர் நல்லது நாடும் அறிவினர் என்றும், மூடர்கள் தீமையினைத் தேடும் திறத்தினர் என்றும் சொராஸ்டர் என்னும் பெரியார் தமது அறவியல் சமயக் கருத்துக்களாகக் கூறுகிறார்.

மனித வாழ்க்கையில் தோன்றும் சிக்கல்களை நோக்கிச் சிந்தனையை இயக்கியவர்களில் முதன்மையானவர்கள் சொபிஸ்டுகள் எனலாம்.

அறவியல் தத்துவத்தின் தந்தையெனப் போற்றப்படுபவர் சாக்ரடீசு. சாக்ரடீசு தோன்றிய பிறகு தான் கிரேக்க தத்துவம் மனிதத் தேவைகளை மனதில் கொண்டு அறவியல் சிக்கல்களை ஆராய்ந்து சிறப்புப் பெற்றது. ஒரு நாட்டின் நல்ல குடிமகன் என்பவன் குடிமகனுக்குரிய தகுதிகளை அறிந்திருத்தல் வேண்டும். அதாவது நல்லன அறிதல் முதற்கடமை, அறிந்தபின் நல்லன புரிதல் வேண்டும். ஆதலின் "அறிவுதான் அறம்"(Knowledge is virtue) என்று சாக்ரடீசு போதித்தார். கிரேக்கச் சிந்தனையாளர்களில் சாக்ரடீசின் நிலையும் இந்தியச் சிந்தனையாளர்களில் புத்தரின் நிலையும் பெரிதும் ஒத்திருப்பதைக் காணலாம். இருவரும் பகுத்தறிவுக்கு முக்கியத்தும் கொடுத்துள்ளனர். ஆனால் தேவர்களின் ஆற்றல்களையும் சடங்குகளின் ஆற்றல்களையும் புத்தர் புறக்கணித்தார். பிராமணம் தேவதைகளுக்கும், சடங்களுக்கும்

* உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை, தூய வளனார் கலை மற்றும் அறிவியல் கல்லூரி (தன்னாட்சி), கடலூர்-1.
கைப்பேசி: 9677547680, மின்னஞ்சல்: jrmary1710@gmail.com

முக்கியத்துவம் கொடுத்தது. பிராமண நூல்களில் கம்மம் (கா்மா) என்ற சொல் சமயச் சடங்குகளை சுட்டி நிற்கின்றது. பௌத்தம் நற்செயல், தீச்செயல், அவற்றிற்கான விளைவுகளைச் சுட்டி நிற்கின்றது. இதிலிருந்து உணரப்படுவது யாதெனில் "பிராமணம் சடங்கு மயமே அறிவு மயம்" என்கிறது, பௌத்தம் "அறமயமே அறிவுமயம்" என்கிறது. இக்கருத்தை எஸ். தசிபணா் அவா்களின் கருத்தோடு ஒப்பிட்டு காணச் செய்கிறாா். சோ.ந. கந்தசாமி.1

## புத்தரும் பௌத்தக் கூறுகளும்

உலகில் முதன் முதல் சமுதாய சமத்துவத்தினைப் போதித்த பெருமைக்குரியவா் புத்தரே எனலாம். தீவினைகளைத் தவிா்த்து நல்வினைகளைப் புரிந்து மனத்தூய்மையுடன் திகழ்தலைத்தான் புத்தரின் பொன்னுரையாகப் புகல்கிறது தம்ம பதம். மேலும் மனித நேயத்தை பறைசாற்றுகின்றத் திறன் போற்றத்தக்கது.2

**மனத்துக்கண் மாசிலன் ஆதல் - அனைத்தறன்**

**ஆகுல நீர பிற.**3

மனத்தில் மாசின்றி இருத்தலே சிறந்த அறம் என்கிறாா் வள்ளுவா். மனத்தில் ஏற்படும் மாசுகளில் காமம் முதலிடம் பெறுகிறது. காமத்தை களைந்துவிட்டால் வெகுளி, மயக்கம் போன்றவை தாமாகவே மறைந்துவிடும். எனவே மனத்தைப் பண்படுத்துதல் அறத்தின் அடிப்படைத் தேவையாகும். புலன்களில் குறைபாடுகளையும், இளமை வனப்பு இவற்றின் நிலையாமையினையும், மனதில் பதிவு செய்தால் காமத்தை அழித்துவிடலாம். இதனையே பௌத்தம் தலையாயக் கொள்கையாக மேற்கொண்டது. ஆசையை அறுக்க நிலையாமை உணா்வை ஒரு சாதனமாகக் கொண்டது. அறம்புரிவதற்கு தூண்டுதலாக இவ்வுணா்வே அடிப்படையாகின்றது. தவமகள் மணிமேகலையும் முதன்முதலில் தன் மனத்தைக் கட்டுப்படுத்தி காமம் களைந்து மெய்யுணா்வு பெற்று தொண்டு புரியத் தொடங்கினாள்.

## மணிமேகலையின் அறக்கூறுகள்

**"எண்ணிய எண்ணியாங்கு எய்துப எண்ணியாா்**

**திண்ணியராகப் பெறின்"**4

என்ற வள்ளுவனின் வரிகள் எண்ணியபடியே செயலாற்றுவதில் உறுதி உடையவராக இருந்தால் அவா் எண்ணியவற்றை நினைத்தவாறே அடைவா் என்பதை விளக்குகிறது. மணிமேகலையும் கால, தேசங்களின் நிகழ்ச்சிகளாலும், மக்களாலும், மற்றவா்களாலும் தனது மனத்திண்மையால் வெல்கிறாள். தன் எண்ணத்தையும் நிறைவு செய்கிறாள் அவளுடைய தூய முயற்சிகள் நிறைவடைய தெய்வங்கள் அவளுக்குத் தோன்றும் துணையாகவும், தோன்றாத்துணையாகவும் நின்று துணை புரிந்ததை காப்பிய ஆசிரியரின் வரிகளால் அறிகிறோம்.

## துறவு ஒழுக்கம்

**"குடிசெய்வல் என்னும் ஒருவற்குத் தெய்வம்**

**மடித்தற்றுத் தான் முந்துறும்"**5

என்னும் உலகப் பொதுமறையின் வாக்கு மெய்யானதை மணிமேகலையின் வாழ்வு உணா்த்தி நிற்கின்றது. மணிமேகலையின் துறவு ஒழுக்கத்தையும், வைராக்கியத்தையும் காப்பாற்றும் திறத்தில் வேலியாக செயல்பட்டவா்கள் தாய் மாதவி, அறவண அடிகள், காயசண்டிகை, சுதமதி போன்றவா்கள். தெய்வ நிலையில் மணிமேகலா தெய்வம், புத்தபீடிகை, தீவதிலகை, கந்திற்பாவை, சம்பாபதி முதலிய தெய்வங்கள் செயல்பட்டன. அறவண அடிகள் தேவையான பொழுதெல்லாம் மணிமேகலைக்கு புத்த தருமங்களைப்பற்றியும், துறவிகளின் சிறப்பையும், மக்களுக்குப் பசிப்பிணி போக்குவதைப்பற்றியும்

விளக்கிச் சென்றுள்ளார். இதனால் மணிமேகலையின் துறவு உள்ளமும் தொண்டு மனப்பான்மையும் சரிவு இல்லாமல் வளர்ந்தோங்கியது எனலாம். மணிமேகலாதெய்வம் தக்க வேளையில் உவவனம் வந்து மணிமேகலையை மணிபல்லவத்திற்குக் கொண்டுச் சென்று உதயகுமரனிடமிருந்து காப்பாற்றுகின்றது. புத்தபீடிகை அவள் பழம் பிறப்பை உணர்த்துகின்றது.

கந்திற்பாவையோ சமயத்தில் காஞ்சனனுக்கு, அவன் மனைவி காயசண்டிகை உருவத்தில் இருந்தவள் மணிமேகலையே ஒழிய, அவள் காயசண்டிகை அல்ல என்று சொல்லி காஞ்சனனால் அவளுக்கு வரவிருந்த ஆபத்தினின்று அவளைக் காப்பாற்றியது. இப்படியாக மணிமேகலையின் துறவிற்கும், தொண்டிற்கும் இடையூறாக இருந்த அனைத்தும் நீங்கப் பெற்றதை அறியலாம். பின்னர் அவள் காவிரிபூம்பட்டினத்தினின்று ஆபுத்திரன் நாடாகிய சாவகத் தீவிற்குச் செல்கிறாள்.

இளம் துறவி மணிமேகலை சாவகத்தீவில் தான் கற்றுணர்ந்த புத்த தருமங்களையும், முற்பிறப்பு, பிற்பிறப்பு கூறுகளையும் பிறருக்கு எடுத்துக்கூறும் நல்லாசிரியனாக மாறினாள்.

**"உற்ற நோய் நோன்றல் உயிர்க்கு உறுகண் செய்யாமை**

**அற்றே தவத்திற்கு உரு"**6

என்று வள்ளுவன் வகுத்துக் காட்டிய தவவாழ்வினை வாழ்ந்து காட்டியவள் மணிமேகலை. அறநூல்களைப் படித்ததனாலோ அல்லது வாழ்க்கையில் ஏற்பட்ட துயர் காரணமாகவோ அவள் துறவு மேற்கொள்ளவில்லை. வாழ்க்கையின் உண்மைகளை உணர்ந்து துறவு மேற்கொண்ட மணிமேகலை அழியக் கூடிய உடலின் இயல்புகளை எடுத்து உரைக்கின்றாள். நல் அறமே வாழ்வில் சிறந்தது. எனவே அறம் செய்து வாழ்வதற்கே துறவு பூண்டதை

**"பிறத்தலும் மூத்தலும் பிணிப்பட்டிரங்கலும்**

**இறத்தலும் உடையது இடும்பைக்கொள்கலம்**

**மக்கள் யாக்கை இதுவென உணர்ந்து**

**மிக்க நல்லறம் விரும்புதல் புரிந்தேன்"**7

என மொழிவது உணரத்தக்கது. மேலும்

**"காட்சியின் தெளிந்தனம்"**8

எனக் கணியன் பூங்குன்றனார் உரைப்பது போல நன்றாக உணர்ந்த பட்டறிவினாலே மணிமேகலை துறவு மேற்கொண்டதை உணரலாம்.

## வீர உணர்வு

"ஆண்கள் துணிச்சல் புகழ் கருதிச் செயல்படும் ஒரு விலங்குணர்ச்சியே. ஆனால் பெண்கள் மதிப்பையும் பாராட்டையும் எதிர்பார்த்து வீரச் செயல்களைச் செய்யும் முனைப்பற்றவர்கள். ஆகவே பெண்களின் துணிச்சல், பெருமை, வலிமை ஆகியவற்றின் வெளிப்பாடு அன்பின் அடையாளமாகவும், அறிவின் திறமுமாகவே வெளிப்படும். ஆகவே 'பெண்ணின் வீரம் உணர்வின் மிகையே' என நுட்பமாக விளக்குகிறார் அன்னாசேம்சன்"9

மறுமைப் பயன் கருதிச் செய்தலை ஒருவகை வணிகம் என்று கூறலாம். "அறத்தை விலை கொடுத்து வாங்கும் அத்தகைய அறவிலை வணிகர் தமிழர் அல்லர் என்பதை புறப்பாடல் தெளிவுப்படுத்துகிறது"10 பழந்தமிழரின் அறவாழ்வு அன்பினடியாகத் தன்னலங்கருதாத் தொண்டுகளின் மூலம் பொதுமை நலம் பேணிய பெருமை கொண்டதாக விளங்கியது. அவர்களது சமயவாழ்க்கையின் மேன்மையைப் புலப்படுத்தும் அருள் வாக்காகவே

**"யாதும் ஊரே யாவரும் கேளிர்"**192:1 என்னும் பொருண் மொழி பிறந்தது.

## பசிப்பிணி போக்கும் பேரறம்

“மக்கட் சமுதாயத்தை அல்வழி நீக்கி நல்வழிப்படுத்த எழுந்த ஒரு சீர்த்திருத்தக் காவியம்” என்றும் சமுதாய ஊழலையும் மாந்தர்கள் சமுதாய நோக்கத்தையும் சீராக்க எழுந்த மணிமேகலை”11 என்றும் பாராட்டப்பெறுகிறது. சாத்தனார் பேசும் அறங்களிலே பேரறமாக ஒளிர்வது பசிப்பிணி போக்கும் பசியறமேயாகும்.

**“விடுநில மருங்கிற் படுபல்லார்ந்து**

**நெடுநிர மருங்கின் மக்கட் கெல்லாம்**

**பிறந்த நாட்டொடுஞ் சிறந்தத்ன றீம்பால்**

**அறந்தரு நெஞ்சோ டருள் சுரந்தூட்டும்”**12

என்று பசுவின் அருள் அரவணைப்பைக் காட்டி மக்களினத்திற்கு அறிவு புகட்டுகிறார். அறச்செல்வி மணிமேகலையும் அரும்பசிகளைதலையே பேரறமாகக் கொள்கிறாள்.பசிப்பிணியால் வருந்தும் மக்களை நாடிச் சென்று உணவிடும் செயலை மணிமேகலை மேற்கொண்டிருந்தாள். மணிமேகலையின் புகழுக்குக் காரணமே அவளுடைய உணவுக் கொடை தான் என்று சொல்லலாம்.

**“ஆற்றுநர்க் களிப்போர் அறவிலை பகர்வோர்**

**ஆற்றா மாக்களரும்பசி களைவோர்**

**மேற்றே யுலகின் மெய்ந்நெறி வாழ்க்கை**

**மண்டிணி ஞாலத்து வாழ்வோர்க் கெல்லாம்**

**உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே**

**உயிர் கொடை பூண்ட உரவோ யாகிக்**

**கயக்கறு நல்லறங் கண்டனை”**13 என்று கூறுகிறார்.

பிச்சையெடுத்து உண்ண முடியாத நிலையில் இருப்போருக்காச் சென்று பிச்சையெடுத்து வரவேண்டும். அவ்வாறு பெற்ற உணவை வறியவரின் இடம் தேடிச் சென்று அவர்களுக்கு இடுதல் பௌத்த பிக்குணிகளின் கடமையாக இருந்ததை

**ஏற்றலும் இடுதலும் இரப்போர் கடன், அவர்**

**மேற் சென்றளித்தல் விழுத்ததைகத்து”**14

என்று மணிமேகலை காப்பியம் குறிப்பிடுகிறது. மணிமேகலை காட்டும் சமுதாயத்தில் பசித்தோரின் கூட்டம் பலதரப்பட்டது. அநாதைகள் ஆதரவற்றவர்கள், சமுதாயத்தால் புறக்கணிக்கப்பட்டவர்கள், இவ்வகையினர்.

ஆதுல மாக்கள் (4:42) ஆற்றா மக்கள் (11:93, 17:64, 19:35) ஆரும் இன்மையின் அரும்பிணி உற்றோர் (17:80) பேணா மாக்கள் (28:223) என்று குறிப்பிடுகிறார். நோயாளிகளையும், உடல் ஊனம் உள்ளவர்களையும் நெடும்புண் உற்றோர் (7, 82) பிணித்தோர் (29:223) காணார்,கேளார், கால்முடம் ஆனோர், பேசார் (28:222,223, 13:111, 112) என்று வரிசைப்படுத்துகின்றார். ஈன்றஇளம் பெண்டிர் (7:81) கடுஞ்சூல் மகளிர் (7:82) என்று பெண்டிரையும், குழவிகளையும் பிறிதொரு வகையினராக வகுத்துக் காட்டுகிறார். துறவறம் புரியும் தவத்தினரை படிவநோன்பியர் (18:224) மாதவர் (28:158) என்றும், பசியால் ஆற்றொணாக் கொடுமை அடைந்தவர்களை ஊரூர் ஆங்கண் உறுபசி உழந்தோர் (17:79) தீப்பசி மாக்கள் (18:17) பசிநோய் உற்றோர் (28:224) பசிதின வருந்திய பைதன் மாக்கள் (17:99) என்று பலதரப்பட்ட மக்கள் யாதானும் ஒரு வகையில் பிறர் உதவியை எதிர்பார்த்து வாழ்ந்ததை அறிகின்றோம். இவர்களுக்கு உதவி புரிவது தான் போதிசத்துவரின் பணியெனத் திவ்வியாவதனம் (395) கருணாபுண்டரிகம் (66:2) சாதகமாலை (219:10) ஆகிய மகாயான பௌத்த நூல்கள் கூறுவதாக அறிகிறோம்.

அனாதைகள், உடல் ஊனம் உற்றோர் இவர்களைத் தவிர சோம்பேறிக் கூட்டங்களும் இரப்போர் பட்டியலில் இடம் பெறக்காணலாம் (21:225) குற்றங்கள் புரிந்து தண்டனையை அனுபவிக்கும் சிறைக்கதிகளும் பசியால் துன்புற்றனர் (19:40-45, 133-136) தீயவர்களைத் திருத்தி நல்வழிப்படுத்துவதே புத்தரின் மிகப்பெரிய குறிக்கோளாகும். சமூகப் பகை ஆற்றல்களை முறையாக நெருங்கினால் நல்லாற்றல்களாக மாற்றி நலம் பெறச் செய்யலாம் என்பதைப் புத்தர் தம் வாழ்க்கையில் சாதித்துக் காட்டியுள்ளார். இம்முறையினையே மணிமேகலை மேற்கொண்டாள். பசியால் வாடும் சிறை கைதிகளுக்கு உணவு வழங்கி விடுதலை பெறச் செய்து நல்லவர்களாக வாழ்வதற்கு வாய்பளித்தாள்.

## பொதுநலம் விழைதல்

சோழ மன்னனைக் கண்டு அவனை வாழ்த்திப் போற்றுகிறாள். நீர்வளம் பெருகவும், நிலவளம் சிறக்கவும், தீதின்றி நாடு செழிக்கவும் வாழ்த்துகிறார். சிறைக்கோட்டத்தை அறக்கோட்டமாக மாற்றும்படியும் மன்னனை வேண்டுகிறாள்.

**"...... வாழிய பெருந்தகை**

**வானம் வாய்க்க மண்வளம் பெருகுக**

**தீதின்றாக கோமகற்கு" ...(19:149,150)என்றும்,**

**"சிறையோர் கோட்டம் சீத்து, அருள் நெஞ்சத்து**

**அறவோர்க்க காக்கும் அது வாழியர்"**15

என மணிமேகலை நாட்டுநலம், மக்கள் நலம், மன்னன் நலம் என அனைவர் நலனையும் நாடி நிற்றலைக் காண்கிறோம். மணிமேகலையின் அருளாலே நரகமாயிருந்த கொடிய சிறைக்கோட்டம்

**"நிரயக் கொடுஞ்சிறை நீக்கிய கோட்டம்,**

**தீப்பிறப்புழந்தோர் செய்வினைப் பயத்தால்**

**யாப்புடை நற்பிறப் பெய்தினர் போலப்**

**பொருள் புரி நெஞ்சிற் புலவோன் கோயிலும்,**

**அருள்புரிய நெஞ்சத்து அறவோ பள்ளியும்**

**அட்டிற்சாலையும், அருந்துநர் சாலையும்**

**கட்டுடைச் செல்வக் காப்புடைத்தாக"**16

என்று உறுதியுடைய செல்வக் காவலை உடையதோர் சிறந்த அறக்கோட்டம் ஆனதை சாத்தனார் காட்டியுள்ளார்.

## அன்பும் அறமும்

தொண்டு செய்தலைப் பற்றி நாவுக்கரசர் தம் தேவாரத்தில் பல இடங்களில் கூறியுள்ளார்.

**"தன் கடன் அடியேனையுந்தாங்குதல்**

**என் கடன் பணி செய்து கிடப்பதே"**17

பணி என்பதில் சிவத் தொண்டாகிய சாரியையோடு மக்கள் தொண்டையும் கொள்கிறார். கிடப்பதே என்ற சொல்லில் தொண்டு தன் முனைப்பின்றிச் செய்யப்பட வேண்டும் என்ற கருத்தை அடக்கியுள்ளார். ஏழைகளுக்கு இரக்கம் காட்ட வேண்டும் என்ற மனப்பாங்கு நாவுக்கரசரின் பாடலில் மிளிர்வதைக் காணலாம்.

**“இரப்பவர்க்கு ஈயவைத்தார் ஈபவர்க்கு அருளும் வைத்தார்**

**கரப்பவர் தங்கட் கெல்லம் கடுநரகங்கள் வைத்தார்**

**பரப்பு நீர்க் கங்கை தன்னைப் படர் சடைப்பாகம் வைத்தார்**

**அரக்கனுக்கு அருளும் வைத்தார் ஐயனை யாறனாரே”**18

மக்களுக்கு அன்பு செலுத்துவதே இறைவனுக்குச் செய்யும் பூசை ஆகும். திருமூலரின் திருமந்திரமும் இக்கருத்தையே விளக்குகிறது.

**“அன்பும் சிவமும் இரண்டென்பர் அறிவிலார்**

**அன்பே சிவமானது யாரும் அறிகிலார்**

**அன்பே சிவமாவது யாரும் அறிந்தபின்**

**அன்பே சிவமாய் அமர்ந்து இருந்தாரே”**19

**“ஆர்வம் உடையவர் காண்பர் அரன் தன்னை**

**ஈரம் உடையவர் காண்பர் இணையடி”**20

இயேசுநாதர் ஐந்து அப்பங்களை ஐய்யாயிரம் பேருக்கு பகிர்ந்து கொடுக்கக் குறையாமல் அப்பம் வளர்ந்த தன்மையும், வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் வாடிய வள்ளலார் சிறு உணவைக் கொண்டு பலருக்கும் உணவு படைத்த வரலாறும், மணிமேகலை சுட்டும் அட்சய பாத்திரத்தின் அற்புதமும் ஒருங்கு வைத்து உணரத்தக்கது.

கயக்கறு நல்லறம், என்று தீவதிலகை புகழ்ந்த பசிப்பிணி போக்கும் பணியைத்தான் பௌத்தம் பேரறமாகக் கருதியது. அறவண அடிகள் தருக்கம் தத்துவம் ஆகிய சமயக்கல்வியை மணிமேகலைக்கு வழங்குவதற்கு முன்

**“மாபெரும் பாத்திரம், மடக்கொடி, பெற்றனை,**

**மக்கள் தேவர் எனவிரு சார்க்கும்**

**ஒத்த முடிவின் ஓரறம் உரைக்கேன்**

**“பசிப்பிணி தீர்த்தல்”**21 என்றே

**அறக்கொள்கையை அறிவுறுத்துகின்றார். எனவே**

**“மண்டிணி ஞாலத்து வாழ்வோர்க் கெல்லாம்**

**உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே”**22

என்றும் **“பசியென்று வந்தவர்க்கு ஒரு பிடி சோறு புசி”** யென்று தருபவனை உயிரையே கொடுத்த இறைவனுக்குச் சமமாகப் பேசுகிறார்.

**“தனியொருவனுக் குணவிலையெனில்**

**ஜகத்தினை யழித்திடுவோம்”**23

என்ற இருபதாம் நூற்றாண்டு மகாகவி பாரதியின் வரிகள் புத்தர் அன்று புகட்டிய எதிரொலியே என்று சொல்லலாம். மக்கள் ஒருவொருவருக்கும் உணவு வேண்டும். உடை வேண்டும். கூரை வேண்டும்.

**“வயிற்றுக்குச் சோறிட வேண்டும் இங்கு**

**வாழும் மனிதருக்கெல்லாம்**

**பயிற்றுப் பலகல்வி தந்து-இந்தப்**

**பாரை உயர்த்திட வேண்டும்”**24

காலத்தை கடந்து நிற்கும் பாரதியின் வரிகள் நல்லதொரு சமுதாயத்தை உருவாக்குகிற கடமை மனிதனாய்ப் பிறந்த ஒவ்வொருவருக்கும் இருக்க வேண்டும் என்பதை எதிரொலித்து நிற்கிறது. மணிமேகலை வாழ்ந்த தொண்டு வாழ்வும், தியாக உணர்வும் அவளின் கடமையுணர்விற்கும், பிறவிப்பயனை அடைந்த திறனுக்கும் சான்றாகின்றன. நல்லதொரு சமுதாயத்தை உருவாக்குகின்ற முயற்சியில் மணிமேகலை வித்தாக செயல்பட்டாள். இதனை "அறத்தின் வித்துப் போன்றவள் மணிமேகலை" என்றும், அறம் வளர்வதற்கும், தழைப்பதற்கும் வாய்ப்பாக அமைந்ததை "வித்து" என்ற சொல்லாலும் தெளிவுப்படுத்தியுள்ளார் சாத்தனார்.

பசியை நோய் என்று கூறியதால் பசியை தணிக்கும் உணவை மருந்து என்று கூறுகிறார். "ஆருயிர் மருந்து" "உயிர் மருந்து" "பசிப்பணி மருந்து" என்று உணவு புகழப்படுகிறது. வானோர் உண்ட அமிழ்தம் இறப்பைத் தடுத்தது போல பசியால் வாடுவோரின் இறப்பைத் தடுக்கும் உணவும் அமுது எனப் போற்றப்பட்டது (11:37, 15:51) அட்சயப் பாத்திரம் மணிமேகலையின் கையில் வருவதற்கு முன்னர் ஆபுத்திரன் என்ற தன்னலமற்றத் தொண்டு புரிந்தவனுக்கு சிந்தாதேவியால் வழங்கப்பட்டிருந்தது. "நாடு வறண்டாலும் இவ்வோடு வற்றாது, இதில் அள்ள அள்ளக் குறையாது அமுது சுரக்கும். வேண்டிய அளவு அனைவருக்கும் உணவு வழங்கப்படும்" என்று சிந்தாதேவி என்னும் தெய்வம் உணவினைப் பெருகச் செய்து அவனுக்கு அளித்தது. அட்சயபாத்திரம் ஆபுத்திரன் கையில் பணிபுரிந்ததை மணிமேகலை ஆபுத்திரன் கை அமுதசுரப" என்று பாராட்டுவதினின்று அறியலாம். தன்னலம் துறந்து பசிநோய் போக்கிய ஆபுத்தரனை ஆருயிர் முதல்வர் (14:33,68) ஆருயிர் ஓம்புநன் (14:59) என வாழ்த்துகிறார் சாத்தனார்.

## தவமும் தொண்டும்

புத்தன் பிறந்ததும் ஞான உதயம் பெற்றதும் ஆகிய வைகாசி விசாக நிறைநாளில் உயிரோம்பும் அருளாளர் கையில் இவ் அட்சயபாத்திரம் கிடைக்கக் கடவது என்று எண்ணி, புத்தபீடிகையின் முன்னர்த் திகழும் கோமுகிப் பொய்கையில் ஆபுத்திரன் விட்டுச் செல்கிறான் (14:90-95,11:39-45) தீவதிலகையின் அறிவுரையால் கோமுகியை வலம் வந்து வணங்கிய மணிமேகலை வைகாசி விசாக நன்னாளில் அப்பாத்திரத்தைப் பெறுகிறாள். மணிமேகலை பெற்ற அட்சய பாத்திரத்தில் முதன் முதலில் கற்புக்கரசி ஆதிரை உணவு படைக்கிறாள்.

**"அமுதசுரபியின் அகன்சுரை நிறைதரப்**

**பாரகம் அடங்கலும் பிசிப்பிணி அறுகென**

**ஆதிரை யிட்டனள் ஆருயிர் மருந்தென்,**25

என்று ஆதிரை ஆர்வத்துடன் அட்சயப்பாத்திரத்தில் உணவிட்டாள். ஈத்துவக்கும் இன்பம் போல் உயர்ந்த இன்பம் வேறொன்று இல்லை என்ற கருத்தினைக் கூறி ஒவ்வொரு பாத்திரமும் பசிப்பிணிபோக்குதலை கடமையாகக் கொண்ட திறம் விளக்கப்படுகிறது. ஆதிரையின் அருள் உள்ளம் மணிமேகலையின் தொண்டுள்ளத்தைப் போல் மேம்பட்டு காணப்படுகிறது. உலகம் முழுவதும் பசிப்பிணி நீங்கி நல்வாழ்வு வேண்டும் என்ற உயரிய நோக்கம் அட்சயப்பாத்திரத்தில் அமுது படைத்ததனின்று விளக்கப்படுகின்றது.

சாதுசக்ரன் எனும் பௌத்தப் பெரியார் உணவளிக்கும் இவ் அறச்செல்வியை

**"எம் மனை! உண்கேன்,ஈங்குக் கொணர்"**26 (10:39)

**தாய் என விளிக்கின்றார். பச்சிளங்க குழந்தையின் முகம்பார்த்து**

**அன்புப் பெருக்கால் தீம்பால் சுரக்கும் மார்புபோல் அமுதசுரபி உணவு சுரத்தலைக்**

**காண்பதற்கு மணிமேகலை விழைந்தாள்** (11:114-118)

**கானமர் செல்வி, கடிப்பசி களைய,**

**ஓடுகைக் கொண்டு நின் றாட்டு நள் போலத்"**

**தீப்பசி மாக்கட்குச் செழுஞ்சோ றீத்துப்**

**பாத்திரம் ஏந்திய பாவையைக் காண்டலும்"**27 (18:115-118)

மணிமேகலை அமுதசுரபி ஏந்தி ஏழையர்க்கு உணவளித்து அறம் வளர்த்தத்திறம் உலகம்மையாகிய பராசக்தி காஞ்சி மாநகரில் அறம் வளர்த்த தன்மைக்கு ஒப்பானதாகும். வெயிலாகிய பஞ்சத்தில் மேகமாகத் தோன்றிய மணிமேகலை, மழையாகிய அமுதசுரபியின் உணவினைப் பொழிந்து பசியாகிய வெம்மையைப் போக்கியவள்.

**நல்லறம் செய்வோர் நல்லுலகடைவர்" என்று ஈதல்**

**அறத்தில் மணிமேகலையை அறவண அடிகள் ஈடுபடுத்துகின்றார்.**

**"மக்கள் தேவர் எனவிரு சாரர்க்கும்**

**ஒத்த முடிபின் ஓர் அறம் உரைக்கேன்**

**பசிப்பிணி தீர்த்தல்"**28

அமுதசுரபியெனும் பெறற்கரிய பாத்திரத்தை நீ பெற்றுள்ளாய், மக்கள் தேவர் என்ற உயிர்களின் பசிப்பிணி தீர்த்தலே பேரறம். இதனை நீ செய்வாயாக" என்று ஊக்கமளிக்கின்றார். மேலும் சோழநாடு என்ன காரணத்தாலோ காவிரி சுரந்து நீர் பாயவும் வறுமையுடைத்தாய்த் துன்புறுகின்றது. அமுதத்தைப் பிறர்க்கெல்லாம் கொடுக்க வேண்டியது இருக்க அதனை ஒளித்து வைத்தால் எவ்வளவு கொடுமையுடையதோ அவ்வளவு கொடுமையுடையது நீ அமுதசுரபியை வைத்துக் கொண்டு உயிர்களை பேணாதிருப்பது. ஆதலின் பஞ்சம் நிறைந்த சோழ நாட்டிலுள்ள உயிர்களின் பசியை நின் அமுதசுரபி கொண்டு நீக்குவாயாக" என்று அறிவுரை கூறுகின்றார் (15:46-55) புத்தர் பெருமானின் அறநெறியையும் தூய தொண்டினையும் உலகிற்கு உணர்த்தும் கருவியாக மணிமேகலை படைக்கப்பட்டுள்ளாள்.

**"சத்தியத்தில் அழகைப்பார், சத்தியத்தின் வழியே அழகைப்பார், உருவத்தின் அழகு ஓர் அழகல்ல, உள்ளத்து அழகே அழகு"** என்பது காந்தியடிகளின் இலக்கியக் கோட்பாடு. மணிமேகலையின் வாழ்க்கைத் தத்துவம் காந்தியடிகளின் இக்கோட்பாடாக இலங்குதலைக் காணலாம். சத்தியத்தின் வழி அறப்பணி செய்து ஏழைகளின் சிரிப்பில் இறைவனைக் கண்டவள். மனிதனின் தோற்றத்தைக் கண்டு ஒதுங்கிச் செல்லவில்லை. அவளைச் சுற்றி காணாரும், கேளாரும், கால் முடப்பட்டாரும் சூழ்ந்து நின்றதாகவே கவிஞன் பாடியுள்ளார். சிறையில் அடைக்கப்பட்டு வருந்தியவர்களைத் தேடிச் சென்று உணவளித்து நல்லோர்களாகத் திருத்தி அவர்களின் மறுவாழ்விற்கு நற்றாயாக விளங்குகின்றாள்.

**"அன்பின் விளைவு அறம் அறத்தின் விளைவு நெறி**

**நெறியின் விளைவு மகிழ்வு மகிழ்வின் விளைவு மன ஒருமை**

**மன ஒருமையின் விளைவு பகுத்தறியும் பண்பு**

**பகுத்தறிவின் விளைவு அறக்கூறுகளை எண்ணுதல்**

இப்படி படிப்படியாக வளர்ச்சிப் பெற்ற மணிமேகலை அறம் தொடர்பாக எண்ணப்படும் தெய்வீக எண்ணங்களைக் கொண்டிருந்தாள். இளமை நிலையாமையையும், யாக்கை நிலையாமையையும் எடுத்துக் கூறி சமுதாயத்தில் விழிப்புணர்ச்சியை ஏற்படுத்துகிறாள்.

## நிலையாமையும் நித்தியமும்

**"இன்னா செய்தார்க்கும் இனியவே செய்யாக்கால்**

**என்ன பயத்ததோ சால்பு"**29

என்னும் வள்ளுவப் பெருந்தகையின் கருத்திற்கிணங்க மணிமேகலை சான்றாண்மைச் செல்வியாக விளங்குகிறாள். கற்ற கல்வி மெய்யுணர்வு ஆகாது என்றும், உள்ளத்தில் சினம் தோன்றாமல் காத்துக் கொள்பவரே உண்மை அறிவு வாய்க்கப் பெற்றவர் என்றும், துன்பத்தில் துவளும் மக்களுக்குக்

கொடுத்து உதவுபவரே வளமான வாழ்வினை உடையவர் என்றும், பசியால் வருந்தியவரின் பசியினைப் போக்கியவரே மேலுலகத்திற்குச் செல்லும் வழியை அறிந்தவர் என்றும் உயிரினங்களுக்கெல்லாம் அன்பு செய்பவரே துன்பத்தை அறுக்கின்ற முடிவான மெய்ப் பொருளினை உணர்வர் என்னும் உண்மைகளை மணிமேகலை

**"கற்ற கல்வி யன்றால், காரிகை!**

**செற்றஞ் செறுத்தோர் முற்ற உணர்ந்தோர்:**

**மல்லல்மா ஞாலத்து வாழ்வோர் என்போர்**

**அல்லல் மாக்கட்கு இல்லது நிரப்புநர்**

**திருந்தோர் எல்வளை செல்லுலகு அறிந்தோர்**

**வருந்தி வந்தோர் அரும்பசி களைந்தோர்**

**துன்பம் அறுக்குந் துணிபொருள் உணர்ந்தோர்**

**மன்பதைக் கெல்லாம் அன்பொழி யார் என**

**ஞான நன்னீர் நன்கனம் தெளித்துத்**

**தேனார் ஓதி செவிமுதல் வார்த்து**

**மகன் துயர் நெருப்பா, மனம் விறகாக**

**அகஞ்சுடு வெந்தீ ஆயிழை அவிப்ப..."**30

என அரசிக்கு உணர்த்துவதினின்று அறியலாம். காவிப்பூம்பட்டினத்தில் வேண்டிய அறங்களை செய்து முடித்ததன் பின் பொதுத் தொண்டினை எவ்வித இடையூறும் இன்றி தொடர ஆபுத்திரன் நாடாகிய சாவகத் தீவிற்குச் செல்கிறாள். சாவகத் தீவிற்குச் செல்லும் வழியில் பசித்தோர் புலப்படின் அவருக்கும் உணவு வழங்கிச் சென்றாள். சாவகம் சென்ற மணிமேகலை ஆபுத்திரனை மணிபல்லவம் அழைத்துச் செல்கிறாள். அங்கு அவன் புத்தபீடிகையை வணங்கித் தன் பழம் பிறப்பை உணருகின்றான். பின் தன் முன் பிறப்பில் இருந்த உடலைக் கண்டு வருந்துகின்றான். அப்பொழுது அவனுக்கு அறம் உணர்த்தி அவன் மனத்தை மாற்றி, மீண்டும் மக்களுக்கு தொண்டு புரியும் பணியில் அவனை ஈடுபடுத்துகின்றாள் மணிமேகலை. அவள் ஆபுத்திரனை நோக்கி உலகின் குறைபாடுகள் நீங்குவதற்கு ஏற்ற செயல் அறம் புரிதலே.

**"அறமெனப்படுவது யாது எனக் கேட்பின்**

**மறவாது இதுகேள் : மன்னுயிர்க்கெல்லாம்**

**உண்டியும் உடையும், உறையுளும் அல்லது**

**கண்டது இல் -"**31

**என்று உண்மையான அறத்தினை தெளிவுப்படுத்துகின்றாள்.**

**அதைக் கேட்ட ஆபுத்திரன்,**

**என்னாட்டாயினும் பிறர் நாட்டாயினும்**

**நன்னுதல் உணர்ந்து நல்லறஞ் செய்கேன்"**

என மறுமொழி பகர்ந்து தன்னாடு திரும்பி அறம் செய்கின்றான். ஆபுத்திரன் நிலையில் அறப்பணி செய்தவனை புண்ணியராசன் நிலையிலும் அறவடிவினனாகவே நிற்கச் செய்கின்றாள். பின்னர் மணிமேகலை வஞ்சிமாநகர் அடைந்து கண்ணகி தெய்வத்தை வழிபட்டு ஆண் உருப் பெற்று பல்வேறு சமயங்களின் தத்துவங்களையும் அறிந்து தெளிவு பெறுகின்றாள். மக்கள் தொண்டின் மூலம் மதத்தைப் பரப்பும் பணியிலும் ஈடுபட்டுவந்தாள்.

## முடிவுரை

உயர்வு தாழ்வுகள் கருதாக சமூகத் தொண்டே சமயத்தொண்டு என்ற பேருண்மை ஒவ்வொருவர் உள்ளத்திலும் பதிய வேண்டும். எங்கு எப்படி பிறந்தாலும் எந்நிலையில் வாழ்ந்தாலும் ஞான நாட்டம் கொண்டு தத்தம் முயற்சியினாலேயே இறைநிலையை எய்த முடியும் என்பதை விளக்குகிறது. எந்த நிலையிலும் கொண்ட கொள்கையில் இருந்து வழுவாமல் செயல்பட வேண்டும். ஒழுக்க மேம்பாடும் உள்ள உறுதியும் ஒரு மனிதனை உயர்த்துவதோடு தொழத் தக்கச் சிறப்பினையும் பெற்றுத் தரும். உலகத்து உயிர்கள் அனைத்தும், உணவு பெற்றுத் தன்னிறைவு உடையவர்களாக வாழ வேண்டும். ஆடவரே அன்றி பெண்களும் இல்லறத்தைத் துறந்து புத்தன் கண்ட புது நெறியாகிய சயம நெறியில் ஈடுபட்டு சமூகப் பணி ஆற்றலாம்.

## அடிக்குறிப்புகள்

1. 'In once case Gods and ceremonial rise are important while in the other morality is important, ceremonialism is wisdom to the Brahmanas, while moralism is wisdom to Buddhism' சே.ந. கந்தசாமி பௌத்தம் பக்.121.
2. It is not right to call men white who virtue lack for it is sin and not the skin that makes a man black. சே.ந. கந்தசாமி பௌத்தம் பக்.121.
3. திருக்குறள் 34.
4. திருக்குறள் 666.
5. திருக்குறன் 1023.
6. திருக்குறள் 261.
7. மணிமேகலை உதயகுமரன் அம்பலம் புக்க காதை பா. வரி 136 - 139.
8. புறநானூறு 192.
9. A women's heroism is always he excess of sensibility' Shakespear's Heroines - page 28.
10. புறநானூறு 134.
11. தமிழ்துறைப் பேராசிரியர்கள் மணிமேகலைச் சிந்தனைகள் பக். 203.
12. மணிமேகலை ஆபுத்திரன் திறன் அறிவித்த காதை பா. வரி 51 - 54.
13. மணிமேகலை பாத்திரம் பெற்ற காதை பா. வரி 92 - 99.
14. மணிமேகலை சிறைக்கோட்டம் அறக்கோட்டம் ஆக்கிய காதை பா.வரி. 36 - 37.
15. மணிமேகலை சிறைக்கோட்டம் பா.வரி. 149, 150, 157, 158.
16. மணிமேலை உதயகுமரனை காஞ்சனன் வாளாலெறிந்த காதை. பா.வரி. 2 - 8.
17. திருமுறை 5 : 19, 9.
18. திருமுறை 4 : 38, 10.
19. திருமூலரின் திருமந்திரம் 270.
20. திருமூலரின் திருமந்திரம் 273.
21. மணிமேகலை அறவணரைத் தொழுத காதை பா.வரி 115 - 118.
22. மணிமேகலை பாத்திரம் பெற்ற காதை 95 - 96.
23. பாரதியார் கவிதைகள்.

24. பாரதியார் கவிதைகள்.

25. மணிமேகலை, ஆதிரை பிச்சையிட்ட காதை பா.வரி 133 - 135.

26. மணிமேகலை மந்திரம் கொடுத்த காதை பா.வரி. 39.

27. மணிமேகலை உதயகுமரன் அம்பலம் புக்க காதை பா.வரி 115 - 118.

28. மணிமேகலை அறவணர்த் தொழுத காதை. பா.வரி 116 - 120.

29. திருக்குறள் 987.

30. மணிமேகலை சிறைவிடு காதை பா.வரி. 130 - 141.

31. மணிமேகலை ஆபுத்திரனோடு மணிபல்லவம் அடைந்த காதை பா.வரி. 229 - 231.